www.Padasalai.Net www.TrbTnpsc.com

வகுப்பு : 9

தேர்வு எண் | | | | | | |

# மூன்றாம் இடைப் பருவத் தேர்வு - 2025

## சமூக அறிவியல்

நேரம் : 1.30 மணி] [மொத்த மதிப்பெண்கள் : 50

I. சரியான விடையினை தேர்ந்தெடுத்து எழுதுக. 7x1=7

1. ஒப்பந்தக் கூலி முறையானது ஒரு வகை

அ) ஒப்பந்தத்தொழிலாளர் முறை ஆ) அடிமைத்தனம்

இ) கடனுக்கான அடிமை ஒப்பந்தம் ஈ) கொத்தடிமை

2. மான்செஸ்டர் நகரம் ஏன் ஜவுளி உற்பத்திக்கு உகந்த இடமாகக் கருதப்படுகிறது.

அ) நிலம் கிடைக்கப் பெற்றமை ஆ) மிகுந்த மனிதவளம்

இ) நல்ல வாழ்க்கைச் சூழல் ஈ) குளிர்ச்சியான தட்பவெப்பநிலை

3. கீழ்காண்பனவற்றில் எது இரும்பை உருக்குவதற்காக முற்காலத்தில் பயன்படுத்தப்பட்டது?

அ) கற்கரி ஆ) கரி இ) விறகு ஈ) காகிதம்

4. இந்தியாவுடன் வணிக உறவை நிறுவிக் கொண்ட முதல் ஐரோப்பிய நாட்டினர்

அ) போர்த்துகீசியர் ஆ) பிரஞ்சுக்காரர் இ) டேனிஷ் காரர் ஈ) டச்சுக்காரர்

5. ஏழை மக்கள் இடம் பெயர்வை மேற்கொள்வது

அ) வாழ்வாதாரத்திற்காக ஆ) வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தி கொள்ள

இ) சேவைக்காக ஈ) அனுபவத்தை பெறுவதற்காக

6. 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி இந்தியாவின் மக்கள் தொகை

அ) 121 கோடி ஆ) 221 கோடி இ) 102 கோடி ஈ) 100 கோடி

7. தீ விபத்து ஏற்படும் போது நீங்கள் அழைக்கும் எண்

அ) 114 ஆ) 112 இ) 115 ஈ) 118

II. ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி. 5x2=10

8. காலனியாதிக்கம் ஏகாதிபத்தியம் இரண்டையும் வேறுபடுத்தி காட்டவும்.

9. சுனாமிக்குப் பிறகு என்ன செய்ய வேண்டும்.



Scanned with CamScanner
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

10. இங்கிலாந்தில் நகரமயமாதலுக்கான காரணங்களைக் கூறுக.

11. இடம் பெயர்தலுக்கான காரணங்கள் யாவை?

12. இரு சக்கர வாகனம் ஓட்டும்போது தலைக்கவசம் அணிவதன் நன்மைகள் யாவை?

13. ஏழை மக்கள் மற்றும் வசதி வாய்ப்புடைய மக்கள் இடம் பெயர்வதற்கான காரணங்கள் யாவை?

14. கர்னல் பென்னிகுவிக் பற்றி குறிப்பு தருக.

**III. ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும். 5x5=25**

15. கோடிட்ட இடங்களை நிரப்பவும்.

i) ஆங்கிலேயரின் முக்கிய வருவாயாக திகழ்ந்தது -------- ஆகும்.

ii) ஜெர்மனியில் முதல் இருப்புப்பாதை -------- ஆண்டில் இயக்கப்பட்டது.

iii) மக்களின் நகர்வு, நகர்புறங்களை விட கிராமப்புற ------- காணப்படுகின்றன.

iv) பெண்கள் அதிக அளவு இடம்பெயர்வதற்கான காரணம் --------

v) தமிழ்மொழி பேசப்பட்ட பகுதிகளில் -------- வட்டிக் கடன் கொடுக்கும் தொழிலில் இருந்தனர்.

16. தீ விபத்தின் போது என்ன செய்ய வேண்டும் என்பது பற்றி விவரி?

17. ஆப்பிரிக்காவில் காலனி ஆதிக்கம் ஏற்பட்டத்தை விவரி.

18. இங்கிலாந்தின் தொழிற்புரட்சியினால் இந்தியாவில் ஏற்பட்ட விளைவுகள் யாவை?

19. அமெரிக்காவில் இரண்டாவது தொழிற்புரட்சி நடைபெற்றதற்கான காரணங்களை வரிசைப்படுத்துக.

20. சாலை விபத்துக்கானக் காரணிகளை விவரி.

21. இடப்பெயர்வு கொள்கையின் நோக்கங்கள் யாவை?

**IV. கீழ்க்காணும் வினாக்களில் ஏதேனும் ஒரு வினாவிற்கு மட்டும் விடையளி. 1x8=8**

22. அ) ஆழிப் பேரலையைப் பற்றிக் குறிப்பு வரைக.

**(அல்லது)**

ஆ) உலக வரைபடத்தில் கீழ்கண்டவற்றை குறிக்கவும்.

1) பசிபிக் நெருப்பு வளையம்
2) புவி அதிர்ச்சி மண்டலம் (ஏதேனும் ஒன்று)
3) இமயமலை மற்றும் ஆல்ப்ஸ் மலைத்தொடர்
4) ஏதேனும் ஒரு டெல்டா
5) குளிர்பாலைவனம் (ஏதேனும் ஒன்று)
6) வெப்ப பாலைவனம் (ஏதேனும் ஒன்று)
7) சுண்ணாம்பு பிரதேச பகுதி (ஏதேனும் ஒன்று)
8) தென்முனைப் பெருங்கடல்



Scanned with CamScanner
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com